முழுப் பதிப்புரிமையுடையது

aat SRI LANKA

**இலங்கைக் கணக்கீட்டு தொழில்நுட்பவியலாளர் கழகம்**

**ஆரம்பப் பரீட்சை – 2012 ஜனவரி**

**(50) அடிப்படைக் கணக்கியல்**

Basic Accounting

21-01-2012
காலை
[9.00 – 12.00]

**நேரம்: மூன்று (03) மணித்தியாலம்**

பக்கங்களின் எண்ணிக்கை: 10
வினாக்களின் எண்ணிக்கை : 07

- **பரீட்சார்த்திகளுக்கான அறிவுறுத்தல்**

*(1) இவ்வினாத்தாள் A, B, C எனும் மூன்று (03) பகுதிகளைக் கொண்டது.*

*(2) **கீழே குறிப்பிட்டவாறு ஐந்து (06) வினாக்களுக்கு விடை எழுதுக.***
- ***பகுதி A யிலுள்ள வினா இலக்கம் 01 இற்கும்***
- ***பகுதி B யிலுள்ள மூன்று (03) வினாக்களுக்கும்***
- ***பகுதி C யிலுள்ள ஏதாவது இரண்டு (02) வினாக்களுக்கும்***

*(3) **விடைகள் யாவும்** உமக்கு வழங்கப்பட்டுள்ள விடைப்புத்தகத்தில் நீங்கள் பரீட்சை எழுத விண்ணப்பித்த அதே மொழியிலேயே எழுதப்பட வேண்டும்.*

*(4) செய்முறைகள் தெளிவாகக் காட்டப்படல் வேண்டும். எடுகோள்கள் ஏதுமிருப்பின் அவற்றினைத் தெளிவாகக் கூறுக.*

*(5) கணிப்பான்களின் பாவனை அனுமதிக்கப்பட்டுள்ளது.*

*(6) மொத்தம் 100 புள்ளிகள்.*

---

## பகுதி - A

பல்தேர்வு வினாக்கள்
இப்பகுதிக்கான எல்லா வினாக்களுக்கும் விடையளித்தல் வேண்டும்.
30 புள்ளிகள்

**01.** கீழே தரப்பட்டுள்ள ஒவ்வொரு வினாவிற்கும் **மிகவும் சரியான விடையைத்** தரப்பட்டுள்ள (1), (2), (3), (4) என்னும் விடைகளிலிருந்து தெரிவுசெய்து உமது விடைப்புத்தகத்தில் வினாக்களைக் குறிக்கும் ஆங்கில எழுத்துக்களுக்கு எதிரே தெரிவு செய்த விடையின் இலக்கத்தை எழுதுக.

(A) பின்வரும் கணக்கீட்டுச் செயல்முறை (accounting treatment) கம்பனியொன்றினால் நடைமுறைப்படுத்தப்பட்டது.

"தொலைபேசிக் கட்டணப் பட்டியல் (Telephone bill) பொருத்தமானதாயினும் கணக்கீட்டு ஆண்டில் அது செலுத்தப்படாததால் ஆண்டிறுதியில் ஒரு பொறுப்பாக (liability) கணக்கீடு செய்யப்பட்டது."

இச்செயல்முறையில் அடிப்படையாகவுள்ள (underlying) கணக்கீட்டு எண்ணக்கரு :

(1) புத்திசாதுரிய எண்ணக்கரு (Prudence concept)
(2) அட்டுறு எண்ணக்கரு (Accrual concept)
(3) வரலாற்றுக் கிரய எண்ணக்கரு (Historical cost concept)
(4) தொடர்ந்து இயங்கும் எண்ணக்கரு (Going concern concept)

(B) **அமல்** தனது வியாபாரத்திற்குள் ரூ.100,000/- மேலதிக மூலதனம் ஒன்றை முதலீடு செய்யும்போது வியாபாரத்தின் மூலதனக் கணக்கில் செலவுப்பதிவு செய்யப்பட்டு (credited) வியாபாரத்தின் காசுக் கணக்கில் வரவுப்பதிவு செய்யப்பட்டது. இக்கணக்கீட்டு முறையுடன் தொடர்புடைய கணக்கீட்டு எண்ணக்கரு :

(1) தாபன முழுமைக்கூறு எண்ணக்கரு (Entity Concept)
(2) புத்திசாதுரிய எண்ணக்கரு (Prudence Concept)
(3) தொடர்ந்து இயங்கும் எண்ணக்கரு (Going concern concept)
(4) இணைவுத்தகவு எண்ணக்கரு (Matching concept)

(C) **கமலின்** வியாபாரமானது கொழும்பில் ஒரு காணியைச் சொந்தமாகக் கொண்டிருக்கிறது. அதனுடைய சந்தைப் பெறுமதி ரூ.1,750,000/- ஆக இருந்தபோதிலும் வியாபாரத்தின் ஐந்தொகையில் கொள்வனவுக் கிரயப்படி ரூ.1,250,000/- காட்டப்பட்டுள்ளது. இதன் அடிப்படையாகவுள்ள கணக்கீட்டு எண்ணக்கரு :

(1) கொள்கைமாறா எண்ணக்கரு (Consistency Concept)
(2) இணைவுத் தகவு எண்ணக்கரு (Matching Concept)
(3) வரலாற்றுக் கிரய எண்ணக்கரு (Historical cost concept)
(4) தொடர்ந்து இயங்கும் எண்ணக்கரு (Going concern concept)

(D) பின்வருவனவற்றுள் ஒரு கணக்கீட்டு வெளியீடாக (an accounting output) **கருதப்படாதது** எது ?

(1) வருமானக்கூற்று (Income statement)
(2) ஐந்தொகை
(3) காசுப்பாய்ச்சல் கூற்று (Cash flow statement)
(4) விற்பனை நாளேடு

(E) வாங்குவோனால் கடன் நிபந்தனை (credit terms) கள் அடிப்படையில் பொருட்கள் விற்பனை செய்யப்பட்டு மீள அனுப்பப்பட்டால் விற்பனையாளன் வாங்குவோனுக்கு வழங்குவது :

(1) செலவுப்பதிவுக் குறிப்பு (Credit Note)
(2) வரவுப்பதிவுக் குறிப்பு (debit Note)
(3) விலைப்பட்டியல் (Invoice)
(4) அனுப்புதல் குறிப்பு (Dispatch note)

(F) **Ashi Enterprise,** 2011 ஏப்ரலில் முதல் இரண்டு வாரத்திற்கான சில்லறைக்காசு கட்டுநிதி (Petty cash) கொடுக்கல் வாங்கல்களின் விபரங்கள் கீழே தரப்பட்டுள்ளன.

2011 ஏப்ரல் 01 இல் பிரதான காசாளரிடமிருந்து பெற்றுக்கொண்ட பணம் ரூ.2,500/-

| **திகதி** | **உறுதிச்சீட்டு இல.** | **விபரம்** | **ரூ.** |
|---|---|---|---|
| 05.04.2011 | 001 | காகிதாதிகள் கொள்வனவுகள் | 400 |
| 10.04.2011 | 002 | முத்திரைக் கட்டணங்கள் | 500 |
| 12.04.2011 | 003 | போக்குவரத்து | 650 |
| 15.04.2011 | 004 | செய்தித்தாள்கள் | 800 |

2011 ஏப்ரல் 16 இல் சில்லறைக்காசு கட்டுநிதி மீள்நிரப்பு செய்யப்பட்டது. மீள்நிரப்பு செய்யப்பட்ட (reimbursed) தொகை எவ்வளவு ?

(1) ரூ.2,500/-. (2) ரூ.150/-.
(3) ரூ.2,350/-. (4) மேலே கூறிய எதுவுமல்ல.

(G) **S & D** நிறுவனத்தின் காசேட்டில் வங்கிக் கணக்கிற்கு வரவு மீதி 2011 மே 31 இல் உள்ளபடி ரூ..222,000/- ஆக இருந்தது. (debit balance of the Bank Accounts) அந்தத் திகதியில் உள்ளவாறான வங்கிக்கூற்று மீதியானது காசுப்புத்தக வங்கிக் கணக்கு மீதியிலிருந்து வித்தியாசமாக உள்ளது.

வங்கிக்கூற்றை சரிபார்க்கும்போது பின்வருவன அடையாளம் காணப்பட்டன.

- வங்கி, வங்கிக் கட்டணங்களாக ரூ.2,000/- ஐ வரவுப் பதிவு செய்திருந்தது. இது காசேட்டில் பதிவுசெய்யப்படவில்லை.
- ரூ.5,000/- இற்கான ஒரு வட்டி வருமானம் வங்கிக் கணக்குக்கு செலவுப்பதிவு செய்யப்பட்டிருந்தது. இது காசேட்டில் பதிவுசெய்யப்படவில்லை.
- வைப்பீடு செய்யப்பட்ட ஆனால் 2011 மே 31 வரையில் தேறாத (not realized) காசோலைகள் ரூ.10,000/-.

2011 மே 31 இல் உள்ளவாறான வங்கிக்கூற்றின்படியான சாதகமான மீதி என்ன ?

(1) ரூ.209,000/-.  (2) ரூ.215,000/-.

(3) ரூ.235,000/-.  (4) ரூ.205,000/-.

(H) பின்வரும் கொடுக்கல் வாங்கலிலுள்ள வழுக்களுள் பரீட்சை மீதியின் சமன்பாட்டைப் பாதிப்பவை எவை ?

(1) ரூ. 6,000/- பெறுமதியுள்ள விற்பனைப் பட்டியல், விற்பனைகள் ஏட்டிலும் அதேபோன்று கடனாளிகள் ஏட்டிலும் இருமுறை பதிவு செய்யப்பட்டுள்ளது.

(2) அம்மாதத்திற்குரிய ரூ.18,000/- இற்கான ஒரு வட்டி வருமானம், விற்பனைகள் கணக்கில் செலவுப்பதிவு செய்யப்பட்டது.

(3) வாடகை முற்பணக் கணக்கின் ரூ.12,000/- இற்கான ஆரம்ப மீதி, வாடகை முற்பணக் கணக்கில் பதிவு செய்யப்படவில்லை.

(4) மின்சாரத்திற்காகச் செலுத்தப்பட்ட ரூ.20,000/- கொடுப்பனவு தொலைபேசி செலவுகள் கணக்கில் வரவுப் பதிவு செய்யப்பட்டது.

(I) **Sama Traders** இனால் 2011 மார்ச் 31 இல் உள்ளவாறு பிரித்தெடுக்கப்பட்ட பரீட்சை மீதியானது, இணக்கம் பெறாததோடு (not agree) வித்தியாசம் ஒரு தொங்கல் கணக்கிற்கு (suspense account) மாற்றம் செய்யப்பட்டது.

பின்னர் கீழ்க் கூறப்படுவன அடையாளம் காணப்பட்டன.

- விற்பனைகள் நாளேடு ரூ.51,000/- ஆல் குறைந்து கூட்டல் செய்யப்பட்டது.
- தொலைபேசி செலவுக்காக வழங்கப்பட்ட ரூ.23,000/- இற்கான காசோலை, காசேட்டில் திருத்தமாகப் பதிவுசெய்யப்பட்டது. ஆனால் தொலைபேசிச் செலவு ஏட்டில் எந்தவொரு பதிவும் செய்யப்படவில்லை.
- அட்டுறு வாடகை (Accrued rent) ரூ.15,000/- பொது நாட்குறிப்பில் இருமுறை பதியப்பட்டது.

திருத்தமான பதிவுகள் செய்யப்படுவதற்கு முன்பு, தொங்கல் கணக்கில் மீதி எதுவாக இருந்திருக்கும் ?

(1) ரூ.13,000/- வரவு.  (2) ரூ.28,000/- வரவு.

(3) ரூ.23,000/- வரவு.  (4) இவைகளில் ஒன்றுமில்லை.

(J) உற்பத்திப் பொருள் ஒன்றின் தயாரிப்புச் செயற்பாட்டில் நேரில் மூலப்பொருள(Indirect material), நேரில் கூலி (Indirect labour), நேரில் செலவுகள் (Indirect expenses) ஆகியவற்றின் மொத்தக்கிரயத்தை அழைப்பது,

(1) உற்பத்தி மேந்தலை (Production Overhead)
(2) மாறும் கிரயம் (Variable cost)
(3) நிலையான கிரயம் (Fixed cost)
(4) முதன்மைக் கிரயம் (Prime cost)

(K) உற்பத்தி செய்யப்பட்ட அலகுகளின் எண்ணிக்கை அடிப்படையில் செலுத்தப்பட்ட உரிமப்பணச் செலவு (Royalty expense) பின்வருவனவற்றுள் எதுவாக வகைப்படுத்தப் படல் வேண்டும் ?

(1) நேரடி செலவு (Direct expense)
(2) நேரில் செலவு
(3) படிநிலைக் கிரயம் (Step cost)
(4) நிலையான கிரயம் (Fixed cost)

(L) சீமெந்து விற்பனையாளரான **Chathura,** 2011 டிசம்பர் 1 ஆம் திகதியில் உள்ளபடி ரூ.1,200,000/- பெறுமதிய சீமெந்து இருப்பொன்றை வைத்திருந்தார். ஒவ்வொன்றும் ரூ.800/- பெறுமதியான 1,500 சீமெந்து மூட்டைகளை இது உள்ளடக்குகிறது.

2011 டிசம்பர் முதல் வாரத்திற்கான அவரது கொள்வனவுகளும் விற்பனைகளும் பற்றிய விபரம் கீழேயுள்ளது.

| திகதி | கொள்வனவுகள் (மூட்டைகள்) | விற்பனைகள் (மூட்டைகள்) | அலகு ஒன்றுக்கான விலை (ரூ.) |
|---|---|---|---|
| 01.12.2011 | - | 500 | - |
| 04.12.2011 | 400 | - | 830 |
| 06.12.2011 | - | 300 | - |

கம்பனியானது இருப்புகளை மதிப்பிடுவதற்கு முதல் வந்தது முதல் வெளியே (FIFO) முறையைப் பயன்படுத்துகிறதாகக் கொண்டால் 2011 டிசம்பர் 7 இல் உள்ளதான இருப்பின் பெறுமதி என்ன ?

(1) ரூ.892,000/-.
(2) ரூ.883,000/-.
(3) ரூ.1,132,000/-.
(4) மேற்கூறிய எதுவுமல்ல.

(M) கணக்கீட்டுத் தபான எண்ணக்கரு (accounting entity concept) ஐ சிறப்பாக விபரிப்பது,

(1) கணக்கீட்டுச் செயன்முறையில் உரிமையாளர் சம்பந்தப்பட்டுள்ளதால்.
(2) வியாபாரத்தில் உரிமையாளரின் தனிப்பட்ட கடன்கள் பதிவுசெய்யப்பட்டுள்ளது.
(3) வியாபாரமானது அதன் உரிமையாளரிடமிருந்து வேறுபட்ட தனியானதொரு தாபனமாக அடையாளப்படுத்தப்படும்.
(4) உரிமையாளரின் பெயர் வியாபாரத்தின் பெயராக பயன்படுத்தப்பட மாட்டா.

(N) முதன்மைக் கிரயத்தின் (Prime cost) கணிப்பு **உள்ளடக்காதது** எது ?

(1) நேரில் கூலிக் கிரயம்
(2) நேரடி மூலப்பொருட்கள் கிரயம்
(3) நேரடிச் செலவுகள்
(4) நேரடி கூலிக் கிரயம்

(O) கம்பனி ஒன்று சாதாரண வேலை நேரங்களில் தனது தொழிலாளர்களுக்கு மணித்தியாலம் ஒன்றுக்கு ரூ.60/- வீதம் அடிப்படைச் சம்பளமாக வழங்குகிறது. மேலதிக நேரக் கொடுப்பனவு பின்வருமாறு செலுத்தப்பட்டது.

சாதாரண வேலை நேரத்தின் பின் - அடிப்படைக் கணக்கீட்டு வீதம் + மணித்தியாலம் ஒன்றுக்கான அடிப்படை வீதத்தின் $\frac{1}{3}$

வார இறுதி - மணித்தியாலம் ஒன்றுக்கான அடிப்படை வீதத்தின் இரு மடங்கு.

வேலை எண் ***x*** ஐ பூரணப்படுத்திட பின்வரும் எண்ணிக்கை கூலி மணித்தியாலங்கள் பயன்படுத்தப்பட்டன.

சாதாரண வேலை மணித்தியாலங்கள் 300, சாதாரண வேலைக்குப் பின்னரான மணித்தியாலங்கள் 30, வார இறுதி மணித்தியாலங்கள் 10.

மேற்கூறப்பட்ட விபரங்களை அடிப்படையாகக் கொண்டு, வேலை எண் ***x*** இற்கான மொத்தக் கூலிக் கிரயம்,

(1) ரூ.20,400/-. (2) ரூ.23,460/-. (3) ரூ.21,600/-. (4) இவற்றுள் ஏதுமல்ல

(ஒவ்வொன்றுக்கும் 02 புள்ளிகள் வீதம் மொத்தம் 30 புள்ளிகள்)

## பகுதி - B

கட்டாய வினாக்கள்

இப்பகுதியின் மூன்று வினாக்களுக்கும் விடையளிக்குக.

50 புள்ளிகள்

**02.** **நிஷான் பெஷன் ஸ்ரோர்,** ஆடைகளை வாங்கி விற்கின்ற வியாபாரத்தில் ஈடுபட்டுள்ளது. **நிஷா**ன் வியாபாரத்தின் தனி உரிமையாளர் ஆவார். 2011 மார்ச் 31 இல் உள்ளவாறு அவரது கணக்கு ஏடுகளிலிருந்து பிரித்தெடுக்கப்பட்டதே பின்வரும் பரீட்சை மீதியாகும்.

| | **வரவுகள் ரூ.'000** | **செலவுகள் ரூ.'000** |
|---|---|---|
| இறையிலி காணி – கிரயத்தில் | 1,500 | |
| கட்டிடங்கள் - கிரயத்தில் | 500 | |
| மோட்டார் வாகனங்கள் - கிரயத்தில் | 2,000 | |
| தளபாடங்களும் பொருத்துகளும் - கிரயத்தில் | 100 | |
| **திரண்ட தேய்மானம் - 2010 ஏப்ரல் 01 இல் உள்ளபடி** | | |
| கட்டிடங்கள் | | 25 |
| மோட்டார் வாகனங்கள் | | 400 |
| தளபாடங்களும் பொருத்துகளும் | | 10 |
| தொக்கு இருப்பு – 2010 ஏப்ரல் 01 இல் உள்ளபடி | 200 | |
| வியாபார வருமதிகள் | 600 | |
| கைக்காசு | 50 | |
| வங்கி மேலதிகப்பற்று | | 100 |
| ஏனைய வருமதிகள் | 120 | |
| வியாபாரக் கொடுப்பனவுகள் (Trade Payables) | | 900 |
| ஏனைய கொடுப்பனவுகள் | | 20 |
| நீண்டகாலக் கடன் | | 800 |
| மூலதனக் கணக்கு – **நிஷான்** | | 1,750 |
| விற்பனைகள் | | 3,000 |
| கொள்வனவுகள் | 860 | |
| சம்பளங்களும் கூலிகளும் | 550 | |
| மின்சாரச் செலவுகள் | 120 | |
| தொலைபேசிச் செலவுகள் | 56 | |
| விளம்பரச் செலவுகள் | 35 | |
| நிலையான வைப்புகள் | 100 | |
| வட்டி வருமானம் | | 10 |
| வட்டி செலவுகள் | 75 | |
| எடுப்பனவுகள் (Drawings) | 25 | |
| கட்டிடங்கள் மீதான காப்புறுதிக் கட்டணம் | 100 | |
| விநியோகச் செலவுகள் | 14 | |
| அனுமதிக்கப்பட்ட கழிவு | 10 | |
| | **7,015** | **7,015** |

பின்வரும் மேலதிக தகவல் வழங்கப்பட்டுள்ளது.

(1) 2011 மார்ச் 31 இல் உள்ளவாறு தொக்கு இருப்பின் கிரயம் ரூ.275,000/- ஆகும். தொக்கு இருப்பின் தேறக்கூடிய பெறுமதி (NRV) ரூ.270,000/- .

(2) நிஷான் பெஷன் ஸ்ரோர் தேய்மானக்கொள்கை, பின்வருமாறு நேர்கோட்டு அடிப்படையில் தேய்மானம் செய்வதாகும்.

| | |
|---|---|
| கட்டிடங்கள் | - வருடத்திற்கு 5% |
| மோட்டார் வாகனங்கள் | - வருடத்திற்கு 20% |
| தளபாடங்களும் பொருத்துக்களும் | - வருடத்திற்கு 10% |

(3) ரூ..8,000/- (கிரயத்தில்) பெறுமதியான பொருட்கள் நிஷானினால் தனிப்பட்ட பாவனைக்காக எடுத்துக்கொள்ளப்பட்டது. கணக்கு ஏடுகளில் பதிவு எதுவும் செய்யப்படவில்லை.

(4) **கிரன்** என்பவர் **நிஷான் பெஷன் ஸ்ரோரின்** ஒரு வியாபாரக் கடனாளி (trade debtor) ஆவார். அவர் நீதிமன்றத்தால் பணமுறிவுக்கு (bankrupt) உள்ளானவராகப் பிரகடனப்படுத்தப்பட்டதோடு 2011 மார்ச் 31 இல் உள்ளவாறான அவரது கணக்கு மீதி ரூ.5,000/- வருமதியாளர் ஏட்டில் இருந்தது. அவரிடமிருந்து வருமதியானவைகளை பதிவழிக்கும்படி தீர்மானிக்கப்பட்டது.

(5) செலுத்தப்படாத தொலைபேசி மற்றும் மின்சாரக் கட்டணங்கள் முறையே ரூ.5,000/- மற்றும் ரூ.8,000/- ஆக இருந்தன.

(6) கட்டிடங்கள் மீதான காப்புறுதித் தவணைக் கட்டணம் 2011 ஜனவரி 01 இலிருந்து 12 மாதங்களுக்கு செலுத்தப்பட்டிருந்தது.

(7) 2011 மார்ச் மாதத்திற்கான நிலையான வைப்பு மீதான வட்டி வருமானம் ரூ.1,600/- வங்கிக் கணக்கிற்கு நேரடியாக வைப்புச் செய்யப்பட்டது. இது வியாபாரத்தின் கணக்குகள் ஏட்டில் பதிவுசெய்யப்பட்டிக்கவில்லை.

**நிஷான் பெஷன் ஸ்ரோருக்காக பின்வருவனவற்றைத் தயாரிக்குமாறு நீங்கள் கேட்கப்படுகிறீர்கள்.**

(a) 2011 மார்ச் 31 உடன் முடிவடைந்த ஆண்டிற்கான வியாபார இலாப நட்டக் கணக்கு. (15 புள்ளிகள்)

(b) 2011 மார்ச் 31 இல் உள்ளவாறான ஐந்தொகை. (10 புள்ளிகள்)

(மொத்தம் 25 புள்ளிகள்)

**03.** வீட்டுத் தளபாடங்களைத் தயாரிக்கின்ற **குவாலிட்டி மெனுபக்சரிங்** நிறுவனத்தின் ஏடுகளிலிருந்து 2011 மார்ச் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான பின்வரும் தகவல்கள் பெயர்த்தெடுக்கப்பட்டுள்ளன.

| **விபரங்கள்** | **ரூ.** |
|---|---|
| கூலிக் கிரயம் | 1,000,000 |
| மூலப்பொருட் கொள்வனவு | 1,250,000 |
| தொக்கு இருப்புகள் – மூலப்பொருட்கள் (2010 ஏப்ரல் 01 இல்) | 500,000 |
| தொக்கு இருப்புகள் – புத்துருவாக்கும் வேலை – தொழிற்சாலைக் கிரயத்தில் (2010 ஏப்ரல் 01 இல்) | 800,000 |
| தொக்கு இருப்புகள் – முடிவுப்பொருட்கள் (2010 ஏப்ரல் 01 இல்) | 600,000 |
| தேய்மானம் – தொழிற்சாலை இயந்திரம் | 300,000 |
| தேய்மானம் – தொழிற்சாலைக் கட்டிடம் | 175,000 |
| தொழிற்சாலைக் காப்புறுதி | 100,000 |
| மின்சாரச் செலவுகள் | 900,000 |
| தொலைபேசிச் செலவுகள் | 120,000 |
| நேரடிச் செலவுகள் | 100,000 |

பின்வரும் மேலதிக தகவல்களும் வழங்கப்பட்டுள்ளன.

1. 2011 மார்ச் 31 இல் உள்ளவாறு தொக்கு இருப்புகள் அவற்றின் கிரயத்தில் மதிப்பிடப்பட்டு கீழே தரப்பட்டுள்ளன.

| **விபரம்** | **ரூ.** |
|---|---|
| மூலப்பொருட்கள் | 390,000 |
| புத்துருவாக்கும் வேலை (தொழிற்சாலைக் கிரயத்தில்) | 810,000 |
| முடிவுப்பொருட்கள் | 900,000 |

2. மின்சார மற்றும் தொலைபேசிச் செலவுகளிலிருந்து 35% மட்டுமே தொழிற்சாலையுடன் சம்பந்தப்பட்டவை.

3. 2011 மார்ச் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான செலுத்த வேண்டிய ரூ.500,000/- நிலையான உரிமப் பணக் கொடுப்பனவு ஒன்றுக்கான ஒரு அனுமதிக்கப்பட்ட உடன்படிக்கையின் கீழ் தனது தளபாடங்களைத் தயாரிப்பதற்கான உரிமைகளை **குவாலிட்டி மெனுபக்சரிங்** நிறுவனம் பெற்றிருந்தது. இக்கொடுப்பனவு, கணக்குகள் ஏட்டில் பதிவு செய்யப்படவில்லை.

4. பொதுத் தொழிற்சாலை கூலி தொடர்புடையதாக 25% கூலிக் கிரயம் உள்ளபோது மிகுதி தொழிற்சாலை உற்பத்தியுடன் நேரடித் தொடர்பானதாக இருக்கும்.

2011 மார்ச் 31 உடன் முடிவடைந்த ஆண்டிற்கான

**குவாலிட்டி மெனுபக்சரிங் நிறுவனத்தின் உற்பத்திக் கணக்கைத் தயாரிக்கும்படி நீங்கள் கேட்கப்படுகிறீர்கள்.** (10 புள்ளிகள்)

**04.** (A) ஒரு தனியுரிமை வியாபாரியான **ரொஷானின்** வியாபாரத்தின் 2011 ஜனவரி மாதத்தில் நடைபெற்ற கொடுக்கல் வாங்கல்கள் கீழே தரப்பட்டுள்ளன.

| | **திகதி** | |
|---|---|---|
| (1) | 2011 ஜனவரி 01 | **ரொஷானினால்** ரூ.200,000/- மூலதனமாக வியாபாரத்திற்கு முதலீடு செய்யப்பட்டது. |
| (2) | 2011 ஜனவரி 03 | கடன் அடிப்படையில் ரூ.350,000/- தொகைக்கு பொருட்கள் கொள்வனவு செய்யப்பட்டன. |
| (3) | 2011 ஜனவரி 05 | ரூ.80,000/- காசுக்கு பொருட்கள் விற்பனை செய்யப்பட்டன. அப்பொருட்களின் கிரயம் ரூ.67,500/- |
| (4) | 2011 ஜனவரி 09 | ரொஷான் தனது சொந்தப் பாவனைக்காக ரூ.15,000/- கிரயப் பொருட்கள் வியாபாரத்திலிருந்து எடுத்துக் கொண்டார். |
| (5) | 2011 ஜனவரி 13 | மின்சாரத்திற்காக செலுத்தப்பட்டது ரூ.5,000/-. |
| (6) | 2011 ஜனவரி 15 | வங்கிக் கணக்கிற்கு ரூ.5,000/- வட்டி வருமானம் வைப்புச் செய்யப்பட்டது. |

கணக்கீட்டுச் சமன்பாட்டிற்கு இணங்க (காசு + வங்கி + தொக்கு இருப்புகள் = மூலதனம் + பொறுப்புகள்) இந்தக் கொடுக்கல் வாங்கல்களின் தாக்கங்களைச் சித்தரிக்கும்படி நீங்கள் கேட்கப்படுகிறீர்கள்.

(உதாரணம் : மாதத்திற்கான அட்டுறு வாடகை ரூ.6,000/-
காசு + வங்கி + தொக்கு இருப்புகள் = மூலதனம் + பொறுப்புகள்
= - 6,000/- + 6,000/- )

(07 புள்ளிகள்)

(B) பின்வரும் கொடுக்கல் வாங்கல்களும் நிகழ்வுகளும் சோமவீரவும் புத்திரர்களும் **(Somaweera & Sons)** நிறுவனத்தின் ஏடுகளிலிருந்து பிரித்தெடுக்கப்பட்டவை.

2011 ஜூன் 01 இல் உள்ளவாறு வருமதியாளரின் தீர்க்கப்படாத மீதி :

| **வருமதியாளனின் பெயர்** | **தொகை (ரூ.)** |
|---|---|
| அனில் | 10,000 |
| சுனில் | 15,000 |
| காகுல் | 17,500 |

2011 ஜூன் மாதத்தின் கடன் விற்பனைகள் மற்றும் விற்பனைத் திரும்பல்கள் பின்வருமாறு:

| **வருமதியாளனின் பெயர்** | **கடன் விற்பனைகள (ரூ.)** | **விற்பனைத் திரும்பல்கள் (ரூ.)** |
|---|---|---|
| அனில் | 40,000 | - |
| சுனில் | 30,000 | 5,000 |

காலப்பகுதிக்குள் செய்யப்பட்ட கொடுப்பனவுகளும் அனுமதிக்கப்பட்ட கழிவுகளும் பின்வருமாறு:

| **வருமதியாளன்** | **செலுத்தப்பட்ட தொகை (ரூ.)** | **அனுமதிக்கப்பட்ட கழிவு (ரூ.)** |
|---|---|---|
| அனில் | 18,000 | 2,000 |
| சுனில் | 32,000 | 3,000 |

2011 ஜூன் 29 இல் நீதிமன்றம் காகுலை பணமுறிவு அடைந்தவராகப் பிரகடனப்படுத்தியதோடு அவரிடமிருந்து வரவேண்டிய தொகை பதிவழிக்கப்பட்டது.

2011 ஜூன் 30 இல் உள்ளவாறு வருமதியாளர் கட்டுப்பாட்டுக் கணக்கு மற்றும் தனியாள் வருமதியாளர் பேரேட்டுக் கணக்குகளையும் தயாரிக்குமாறு **நீங்கள் கேட்கப்படுகிறீர்கள்.** (08 புள்ளிகள்)

(மொத்தம் 15 புள்ளிகள்)

## பகுதி - C

இந்தப் பகுதியிலிருந்து ஏதேனும் இரண்டு (02) வினாக்களுக்கு விடையளிக்குக.
20 புள்ளிகள்

**05.** (A) பின்வரும் கொடுக்கல் வாங்கல்கள் **Stile Mart** Computer Accessories கடையின் ஏடுகளிலிருந்து பிரித்தெடுக்கப்பட்டவை.

| மூல ஆவணம் | திகதி | தொகையளவு | விபரம் | விலை (ரூ.) |
|---|---|---|---|---|
| விலைப் பட்டியல் இல. 125 | 06.06.2011 | 100 CDs & 90 DVDs (இறுவட்டுக்கள்) | K&K கம்பனிக்கு கடன் விற்பனை | CD ஒன்று ரூ.45/- வீதம் DVD ஒன்று ரூ..60/- வீதம் |
| விலைப் பட்டியல் இல. 126 | 07.06.2011 | 25 USB Drives (4GB) 30 USB Drives (8GB) | வரையறுக்கப்பட்ட அமல் கம்பனிக்கு கடன் விற்பனை | ஒரு 4 GB USB ரூ.1,000/- ஒரு 8 GB USB ரூ.2,000/- வீதம் |
| விலைப் பட்டியல் இல. 127 | 08.06.2011 | 10 External Hard Drives (320GB) | வரையறுக்கப்பட்ட அமல் கம்பனிக்கு கடன் விற்பனை | External hard drive ஒன்று (320 GB) ரூ.12,000/- வீதம் |
| செலவுப் பதிவுக் குறிப்பு Credit Note No.22 | 10.06.2011 | 05 USB Drives (4GB) 03 USB Drives (8GB) 02 External Hard Drives (320GB) | பழுதுகள் காரணமாக வரையறுக்கப்பட்ட அமல் கம்பனியால் திருப்பி அனுப்பப்பட்டவை. | - |

**நீங்கள்** பொருத்தமான முதன்மைப் பதிவு ஏடுகளைத் தயாரிக்கும்படியும் மீதிகளைப் பொருத்தமான பேரேட்டுக் கணக்குகளுக்கு மாற்றம் செய்யும்படியும் **கேட்கப்படுகிறீர்கள்.**
(07½ புள்ளிகள்)

(B) ஒரு தொழிலாளர் ஊக்குவிப்புக் கொடுப்பனவுத் திட்டத்தின் (a labour incentive payment scheme) நன்மைகள் மூன்றினையும் (03) தீமைகள் இரண்டினையும் (02) பட்டியலிடுக.
(02½ புள்ளிகள்)
(மொத்தம் 10 புள்ளிகள்)

**06.** (A) **Indu Traders** உடன் தொடர்புடைய தகவல்கள் கீழே தரப்பட்டுள்ளன.

(i) 2011 ஆகஸ்ட் மாதத்திற்காகத் தயாரிக்கப்பட்ட பரீட்சை மீதி இணங்கவில்லை (not agree). இதன் வித்தியாசம் தொங்கல் கணக்கு ஒன்றுக்கு மாற்றம் செய்யப்பட்டது. பின்வரும் இரண்டு விடயங்கள் வித்தியாசத்திற்கான காரணங்களாக இனங்காணப்பட்டன.

- வாடகை முற்கொடுப்பனவின் ரூ.5,000/- ஆரம்ப மீதி பரீட்சை மீதிக்கு எடுத்துக்கொள்ளப்படவில்லை.
- விற்பனைகள் கணக்கானது ரூ.8,000/- ஆல் குறைத்து கூட்டல் செய்யப்பட்டது.

மேலேயுள்ள பிழைகளைத் திருத்துவதற்கு குறிப்பேட்டுப் பதிவுகளைத் தயாரிக்கும்படி நீங்கள் கேட்கப்படுகிறீர்கள். (02 புள்ளிகள்)

(ii) 2011 ஆகஸ்ட் மாதத்திற்கான பின்வரும் ஊடுசெயல்கள் இடம்பெற்றன. இவ் ஊடுசெயல்கள் ஏடுகளில் பதிவு செய்யப்படவேண்டியிருந்தது.

- 2011 ஆகஸ்ட் மாதத்திற்கான ஆதனம் மீதான தேய்மானம், பொறி மற்றும் கருவிகள் ரூ.185,000/- ஆக இருந்தது.
- மின்சாரச் செலவினங்கள் ரூ.20,000/- ஆக உத்தேச மதிப்பீடு செய்யப்பட்டிருந்தது. வாடகை ரூ.10,000/- உயர்ந்திருந்தது. இவை முன்கூட்டியே 2011 ஆகஸ்ட்டுக்காக செலுத்தப்பட்டிருந்தது.

மேலேயுள்ள கொடுக்கல் வாங்கல்களைப் பதிவு செய்வதற்கு நாட்குறிப்பேட்டுப் பதிவுகளைத் தயாரிக்குக. (03 புள்ளிகள்)

(B) (i) பின்வரும் தகவல்கள் **XYZ** கம்பனியின் ஏடுகளிலிருந்து பெயர்த்தெடுக்கப்பட்டவை.

மோட்டார் வாகனம் ஒன்று ஒரு விபத்திற்குள்ளாகி 2010 ஜுன் முதலாம் திகதியில் ரூ.250,000/- இற்கு அது விற்று அகற்றப்பட்டது. ரூ.750,000/- கிரயமுடைய இம்மோட்டார் வாகனம் 2007 ஏப்ரல் 01 ஆம் திகதி கொள்வனவு செய்யப்பட்டிருந்தது. விபத்தின் காரணமாக ரூ.150,000/- காப்புறுதி நட்டஈடாகப் பெறப்பட்டது.

கம்பனியின் தேய்மானக் கொள்கையானது மோட்டார் வாகனத்திற்காக நேர்கோட்டு அடிப்படையில் 20% தேய்மானம் செய்வதாகும்.

மோட்டார் வாகன அகற்றலில் இலாபநட்டக் கணக்கினைத் தயாரிக்குமாறு **நீங்கள் கேட்கப்படுகிறீர்கள்.** (02½ புள்ளிகள்)

(ii) பொருட்கள் கோரும் குறிப்பு (Material requisition note) என்பதை சுருக்கமாக விளக்குக. இதில் உள்ளடக்கக்கூடிய மூன்று முக்கிய விடயங்களைக் குறிப்பிடுக.

(02½ புள்ளிகள்)

(மொத்தம் 10 புள்ளிகள்)

**07.** (A) பின்வரும் தகவல்கள் 2011 டிசம்பர் மாதத்திற்கான **Saman Traders** ஏடுகளிலிருந்து பெயர்த்தெடுக்கப்பட்டவை.

**காசேடு**

| திகதி | விபரம் | ரூ. | திகதி | விபரம் | ரூ. |
|---|---|---|---|---|---|
| 01.12.2011 | மீதி மு/கொ | 7,500 | 05.12.2011 | சாமா 007152 | 6,500 |
| 01.12.2011 | விற்பனைகள் | 12,500 | 08.12.2011 | கொள்வனவுகள் 007153 | 20,000 |
| 03.12.2011 | விற்பனைகள் | 19,400 | 15.12.2011 | சிறுசெலவுக்காசு 007155 | 5,000 |
| 16.12.2011 | பெரேரா | 9,600 | 25.12.2011 | சம்பளம் - பியால் 007156 | 7,500 |
| 26.12.2011 | விற்பனைகள் | 18,200 | 28.12.2011 | கொள்வனவுகள் - பெரேரா 007157 | 25,600 |
| 28.12.2011 | அமாலி | 20,500 | 29.12.2011 | எடுப்பனவுகள் 007158 | 9,500 |
| | | | 31.12.2011 | முன்கொண்டு செல்லல் | 13,600 |
| | | **87,700** | | | **87,700** |

**சமான் ரேடர்ஸ்**

**2011 டிசம்பர் மாதத்திற்கான வங்கிக்கூற்று**

| திகதி | விபரம் | வரவு ரூ. | செலவு ரூ. | மீதி ரூ. |
|---|---|---|---|---|
| 01.12.2011 | மீதி மு/கொ | - | - | 12,500 |
| 01.12.2011 | மீளப் பெறுகை 007151 | 5,000 | - | 7,500 |
| 02.12.2011 | வைப்புகள் | - | 12,500 | 20,000 |
| 05.12.2011 | வைப்புகள் | - | 19,400 | 39,400 |
| 08.12.2011 | மீள் பெறுகை 007152 | 6,500 | - | 32,900 |
| 10.12.2011 | வட்டி - FD | - | 3,800 | 36,700 |
| 11.12.2011 | மீள் பெறுகை 007153 | 20,000 | - | 16,700 |
| 18.12.2011 | வைப்புகள் | - | 9,600 | 26,300 |
| 22.12.2011 | காசோலைப் புத்தகக் கட்டணம் | 500 | - | 25,800 |
| 23.12.2011 | நேரடி வைப்புகள் - Trs. | - | 2,000 | 27,800 |
| 23.12.2011 | மீள் பெறுகை 007155 | 5,000 | - | 22,800 |
| 25.12.2011 | மீள் பெறுகை 014956 | 3,000 | - | 19,800 |
| 26.12.2011 | மீள் பெறுகை 007156 | 7,500 | - | 12,300 |
| 30.12.2011 | வங்கிக் கட்டணங்கள் | 300 | - | 12,000 |

2011 டிசம்பர் மாதத்திற்கான பின்வருவனவற்றைத் தயாரிக்குமாறு நீங்கள் கேட்கப்படுகிறீர்கள்.

(a) இசைவாக்கப்பட்ட காசேடு (Adjusted Cash Book)

(b) வங்கி இணக்கக்கூற்று (Bank Reconciliation Statement) (07½ புள்ளிகள்)

(B) கிரய அலகு (cost unit) மற்றும் கிரய மையம் ஆகியவற்றைச் சுருக்கமாக விளக்குக.

(02½ புள்ளிகள்)

(மொத்தம் 10 புள்ளிகள்)

- o0o -